**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-ரோஷ்ணாகாசிம்

தேதி 17.11.2024 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், நைஜிரிய அதிபர் திரு போலா அகமது டினுபு-விற்கும் இடையே இன்று அபுஜாவில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.
- இந்தியாவின் முதல் நீண்ட தூர ஹைப்பர் சோனிக் ஏவுகனை சோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு வெற்றிகரமாக சோதித்து பார்த்தது.
- 70 வயதுக்கும் மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு சுகாதார காப்பீடு அளிக்கும் ஆயுஷ்மான் வாயு வந்தனா திட்டத்தில் இதுவரை, 10 லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.
- திருக்காஞ்சியில் நடைபெற்ற இந்து சமய சனாதன வேத ஆகம திருமுறை திவ்ய பிரபந்த வளர்ச்சி பெருவிழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் பங்கேற்றார்.

<u>*மோடி பயணம் 1* (17)</u>

பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், நைஜிரிய அதிபர் திரு போலா அகமது டினுபு-விற்கும் இடையே இன்று பிற்பகல் அபுஜாவில் உள்ள பிரசிடென்சியல் வில்லாவில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்த பேச்சுவார்த்தை இரு நாடுகளுக்கு இடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு நாட்டு தலைவர்களும் விவாதித்தனர். நைஜிரியாவுடனான கூட்டாண்மைக்கு இந்தியா அதிக முன்னுரிமை

அளிக்கிறது என பிரதமர் அப்போது தெரிவித்தார். பாதுகாப்பு, எரிசக்தி, தொழில்நுட்பம், சுகாதாரம், கல்வி மற்றும் கலாச்சாரம் ஆகியவை இந்தியாவிற்கும், நைஜரியாவிற்கும் இடையேயான ஒத்துழைப்பின் பகுதியாகும் என்றும் அவர் தெரிவித்தார். இதனை தொடர்ந்து, பல்வேறு துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிரதமர் திரு நரேந்திர மோடி நைஜிரியாவில் உள்ள இந்திய சமூகத்தினரிடமும் உரையாற்ற உள்ளார்.

முன்னதாக, 3 நாடுகள் சுற்றுப்பயணத்தின் முதல் கட்டமாக நேற்றிரவு அவர் அபுஜா சென்றடைந்தார். அவரை அந்நாட்டு அதிபர் திரு போலா அகமது டினுபு வரவேற்றார். அதனை தொடர்ந்து விமான நிலையத்திற்கு வெளியே திரண்டிருந்த இந்திய வம்சா வழியினரும்

<u>*மோடி பயணம்* 2 (16)</u>

பிரதமரை அன்புடன் வரவேற்றனர். இந்திய வம்சா வழியினரின் இந்த வரவேற்பு மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் தமது வலைதள பதிவில் தெரிவித்துள்ளார். நைஜிரியாவில் உள்ள மராத்தி சமூகத்தினர் தங்களது கலாச்சாரம் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். மராத்தி மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டதற்கு நைஜிரியாவில் உள்ள மராத்தி சமூகத்தினர் மகிழ்ச்சி தெரிவித்தனர். 17 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர் நைஜிரியாவிற்கு செல்வது இதுவே முதல் முறையாகும். இந்தியாவும்-நைஜிரியாவும் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் வளர்ந்து வரும் பொருளாதார ஆற்றல் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புடன் முக்கிய நட்பு நாடுகளாக உள்ளன. 200 க்கும் மேற்பட்ட இந்திய நிறுவனங்கள் நைஜிரியாவின் முக்கிய துறைகளில் 27 பில்லியன் டாலர்களுக்கு மேல் முதலீடு செய்துள்ளன. இரு நாடுகளும் வலுவான வளர்ச்சி, ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மையையும் பகிர்ந்து கொள்கின்றன. நைஜிரிய நாட்டு

அதிபர் கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ஜி 20 மாநாட்டில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. இதனிடையே, பிரதமர் திரு நரேந்திர

*__மோடி பயணம்__* __3 (14)__

மோடிக்கு நைஜிரிய அரசு கிராண்ட் கமாண்டர் ஆப் ஆர்டர் ஆப் த நைஜர் என்ற விருதை வழங்கி உள்ளது. இந்த விருதை பெறும் 2 ஆவது வெளிநாட்டு பிரமுகர் இவராவார். இதற்கு முன்பு இந்த விருதை 1969 ஆம் ஆண்டு ராணி எலிசபெத் பெற்றுள்ளார். நைஜிரியாவில் இருந்து பிரேசிலின் ரியோடி-ஜெனிரோ நகருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை செல்ல உள்ளார். அங்கு அந்நாட்டு அதிபர் திரு லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா-வின் தலைமையில் நடைபெறும் ஜி 20 உச்சி மாநாட்டிலும் அவர் பங்கேற்று உரையாற்றுகிறார். இந்நிகழ்ச்சியின் போது பிரதமர் திரு நரேந்திர மோடி பல்வேறு உலகளாவிய பிரச்சனைகளில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து எடுத்துரைப்பார். இந்த மாநாட்டில் பங்கேற்கும் பல்வேறு உலக தலைவர்களையும் அவர் சந்தித்து உரையாட உள்ளார். தமது பயணத்தின் 3 ஆவது மற்றும் இறுதிக்கட்டமாக பிரதமர் வரும் 19 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதி வரை கயானாவிற்கு அரசு முறை பயணம் மேற்கொள்கிறார்.

*__ஹைப்பர் சோனிக் ஏவுகனை__* __(11)__

இந்தியாவின் முதல் நீண்ட தூர ஹைப்பர் சோனிக் ஏவுகனை சோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு நேற்று ஒடிசா கடற்கரையில் உள்ள டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் தீவில் இருந்து வெற்றிகரமாக சோதித்து பார்த்தது. இந்த ஹைப்பர் சோனிக் ஏவுகனை ஆயிரத்து 500 கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரத்திற்கு பல்வேறு வகையான ஆயுதங்களை சுமந்து சென்று தாக்கக் கூடிய வல்லமை பெற்றதாகும். இந்த ஏவுகனையை சோதித்து பார்த்த டிஆர்டிஓ

விஞ்ஞானிகள் மற்றும் ராணுவத்தினருக்கு பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார். இது, வரலாற்று சிறப்பு மிக்க தருணம் என்பதோடு, இந்த சாதனை அதிநவீன ராணுவ தொழில்நுட்ப வசதி கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியாவை சேர்க்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

<u>தாக்ரே(10)</u>

ஸ்ரீ பாலாசகேப் தாக்ரேவின் நினைவு தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி அவருக்கு மரியாதை செலுத்தி உள்ளார். இது தொடர்பாக பிரதமர் தமது எக்ஸ் தள பதிவில் விடுத்துள்ள செய்தியில், மகத்தான தலைவரான பாலாசாகேப் தாக்ரேவின் நினைவு நாளில் அவருக்கு மரியாதை செலுத்துவதாக கூறியுள்ளார். அவர், மகராஷ்டிராவின் வளர்ச்சி மற்றும் மராத்தி மக்களின் அதிகாரமளித்தலுக்காக போராடியவர் என்றும், இந்திய கலாச்சாரம் மற்றும் பண்பாட்டின் பெருமையை மேம்படுத்துவதில் அவர் உறுதியாக இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். அவரது துணிச்சலான குரல், தளராத உறுதி ஆகியவை தொடர்ந்து வரும் தலைமுறையினருக்கு ஊக்கம் அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

<u>*பூபேந்திர யாதவ்* (8)</u>

அன்னையின் பெயரில் ஒரு மரம் நடுவோம் திட்டத்தில் அதிக அளவில் மரக்கன்றுகளை நட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களை வலியுறுத்தி உள்ளார். இது தொடர்பாக மத்திய அமைச்சர் திரு பூபேந்திர யாதவ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவை மேற்கொள் காட்டியுள்ளார். பூமியின் நீடித்த நிலைத்தன்மைக்கு அதிக மரக்கன்றுகளை நட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். இந்த இயக்கத்திற்கு உத்வேகம் அளித்து வரும் அனைவருக்கும் பிரதமர் நன்றியினை தெரிவித்துள்ளார்.

தேர்தல் (15)

மகராஷ்டிரா மாநிலத்தில் சட்டப்பேரவை தேர்தல் ஒரே கட்டமாகவும், ஜார்கண்ட் மாநிலத்தில் 2 ஆவது மற்றும் இறுதிக்கட்டமாக வரும் புதன் கிழமை தேர்தல் நடைபெற உள்ளது. இதனை ஒட்டி, தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் முடிவடைய உள்ள நிலையில், அங்கு அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். மகராஷ்டிர மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே அக்கட்சி வேட்பாளர்களை ஆதரித்து நாக்பூர், கெல்ஹபூர், சங்க்லி ஆகிய இடங்களில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார். பிஜேபி தலைவர் திரு ஜே பி நட்டா ஜார்கண்ட் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தேர்தல் பிரச்சார கூட்டங்களில் பங்கேற்றுள்ளார். மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் மகராஷ்டிரா சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடும் பாஜக வேட்பாளர்களுக்கு ஆதரவாக மும்பையில் பிரச்சாரம் மேற்கொண்டார். பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசியல் செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்களை எடுத்துக் கூறி அவர் வாக்கு சேகரித்தார்.

இஸ்ரோ (7)

இந்தியாவில் கனரக தகவல் தொடர்பு செயற்கை கோள் ஜி சாட்-20 ஐ இஸ்ரோ ஸ்பேக்ஸ் எக்ஸ் நிறுவனத்தின் மூலம் அமெரிக்காவில் இருந்து வரும் செவ்வாய் கிழமை விண்ணில் செலுத்துகிறது. இந்த செயற்கை கோள் நாட்டின் தொலைதூர பகுதிகளுக்கு இணைய இணைப்புகளை அளிப்பது உள்ளிட்ட சேவைகளை வழங்கும். இது அடுத்த 14 ஆண்டுகளுக்கு செயல்பாட்டில் இருக்கும் என இஸ்ரோ தலைவர் திரு சோம்நாத் தெரிவித்துள்ளார்.

காப்பீடு (9)

70 வயதுக்கும் மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு சுகாதார காப்பீடு அளிக்கும் ஆயுஷ்மான் வாயு வந்தனா திட்டத்தில் இதுவரை, 10 லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்திட்டத்தில் இணைந்தவர்களில் சுமார் 4 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பெண்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை, ஆயிரத்து 400 பெண்கள் உட்பட 4 ஆயிரத்து 880 மூத்த குடிமக்களின் சிகிச்சைக்காக 9.42 கோடி ரூபாய்க்கும் அதிகமான பணம் வழங்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மணிப்பூர் (14)

மணிப்பூரில் அமைதியை நிலை நாட்ட தேவையான நடவடிக்கையை எடுக்குமாறு மத்திய பாதுகாப்பு படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மணிப்பூரில் கடந்த சில நாட்களாக பாதுகாப்பு நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. அங்கு மோதலில் ஈடுபட்டுள்ள இரு சமூகங்களை சேர்ந்த ஆயுதம் ஏந்திய குற்றவாளிகள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அங்கு உயிரிழப்பு மற்றும் பொது அமைதிக்கு இடையூறு விளைவிப்பதாக அமைச்சகம் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. வன்முறை அல்லது பொது அமைதியை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட முயற்சிப்போர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மாநிலத்தில் அமைதியை நிலை நாட்டவும், அங்கு சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும் பாதுகாப்பு படையினருடன் பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று உள்துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

துணை நிலை ஆளுநர் (9)

புதுவை பகுதி திருக்காஞ்சியில் மாநில ஆலய அர்ச்சகர்கள் பாதுகாப்பு கழகத்தின் சார்பில் நடைபெற்ற இந்து சமய சனாதன வேத ஆகம திருமுறை திவ்ய பிரபந்த வளர்ச்சி பெருவிழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் பங்கேற்று 40 வருடங்களாக ஒரே ஆலயத்தில் பணியாற்றி வருபவர்களுக்கு சான்றிதழ்களையும், பரிசுகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு வேளாண் அமைச்சர் திரு தேனி.ஜெயக்குமார் தலைமை ஏற்றார். சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், மயிலம் பொம்மபுரம் ஆதினம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

ஆசிரமம் (6)

புதுச்சேரியில் அரவிந்தர் ஆசிரமத்தில் அன்னையின் 51 ஆவது நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. இதில் நாடு முழுவதிலும் இருந்து அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு கூட்டு தியானத்தில் ஈடுபட்டனர். இதனை ஒட்டி, அன்னை பயன்படுத்திய அறை பக்தர்களின் பார்வைக்கு திறந்து விடப்பட்டது. ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று அவர் பயன்படுத்திய பொருட்களை கண்டு தரிசனம் செய்தனர்.

இலங்கை (6)

இலங்கையில் ஆளும் தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் புதிய அமைச்சரவை நாளை பதவி ஏற்க உள்ளது. அந்நாட்டின் பிரதமராக மீண்டும் டாக்டர் ஹரிணி அமரசூர்யா பொறுப்பேற்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நாளை நடைபெறும் நிகழ்ச்சியில் அந்நாட்டு அதிபர் திரு அனுர குமார திச நாயக்கே முன்னிலையில், 23 பேர் அமைச்சர்களாக பதவி ஏற்க உள்ளனர்.

தேசிய பத்திரிக்கை தினம் (13)

ஜனநாயகத்தை காப்பதில் ஊடகங்களின் பங்கு மகத்தானது என்று மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். புதுடெல்லியில் நேற்று மாலை நடைபெற்ற தேசிய பத்திரிக்கை தின நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய அவர், சுதந்திர போராட்டக் காலத்திலும் நெருக்கடியான காலக்கட்டங்களிலும் பத்திரிக்கைகள் முக்கிய பங்காற்றியதாக தெரிவித்தார். இந்தியா போன்ற பன்முகத் தன்மை கொண்ட நாட்டில் தவறான தகவல்கள் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் ஜனநாயகத்தின் 4 ஆவது தூண் பத்திரிக்கை என்றும், இதில் போலி செய்திகளை வெளியிடுவது கவலை அளிப்பதாக உள்ளது என்றும் தெரிவித்தார். செய்திகள் மற்றும் கட்டுரைகளின் உண்மை தன்மையை சரி பார்ப்பதற்காக அவர் பிஐபி யின் சோதனை பிரிவை பாராட்டினார்.